**மன்னார் நகர சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபகுதியில் விபரிக்கப்பட்டுள்ளவிடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து மன்னார் நகரசபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வுஅவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டுஉத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிரதான பேரேட்டில் தளபாடம் மற்றும் பொறி ஆரம்ப மீதிகள் முறையே ரூபா 2,010,947 ஆலும் ரூபா 1,103,840 ஆலும் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | ஆரம்ப மீதிகளை மாற்றும் போது சரியான பெறுமதியில் மாற்றுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் சரியான பெறுமதியில் மாற்றப்படும். |

### 1.4 இணக்கமின்மை

#### 1.4.1 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் - இலக்கம் 371 | 12 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,678,168 இனை | நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முற்பணங்களை சீர்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

தீர்ப்பனவு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் வருமான நிலுவை கடந்த ஆண்டில் ரூபா 19,212,864 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 24,177,195 ஆக இருப்பதனால் ரூபா 4,964,331 அதிகரித்துள்ளமை வருமான சேகரிப்பில் வினைத்திறனற்று உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா * | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா * | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2017 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 17,055,000 | - | 18,329,289 | 18,867,241 | 17,080,000 | - | 18,304,367 | 1,244,367 |
| ii. | வாடகைகள் | 28,269,300 | - | 37,065,155 | 5,309,954 | 22,309,300 | - | 30,760,213 | 8,450,913 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,340,000 | - | 1,422,159 | - | 1,010,000 | - | 1,240,841 | 230,841 |
| iv | ஏனைய வருமானம் | 18,086,500 | - | 26,508,501 | - | 11,987,250 | - | 21,273,993 | 9,286,743 |
| | | **64,750,800** | - | 83,325,104 | 24,177,195 | 52,386,550 | - | 71,599,414 | 19,212,864 |

* பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை

#### 2.1.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரிகளின் நிலுவை மொத்தம் ரூபா 16,194,671 இனை அறவிட சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.1.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,089,621 இனை அறவிடுவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.1.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,743,854 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,806,794 தொகையான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைத் தீர்வை கட்டணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | முத்திரைத் தீர்வை கட்டண நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு | கடல் சார் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து பள்ளிமுனை கடற்கரை பகுதி மற்றும் கீரி கடற்கரை பகுதி என்பன |

| | | |
|---|---|---|
| கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடல்கள் மற்றும் கடல்சார் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் கடற்கரையுடன் இணையும் பிரதான கழிவு நீர் வாய்க்கால்களில் கம்பி வலையிலான தடுப்புக்களை அமைத்து பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கடலுடன் சேர்வதை தடுக்கும் விதத்தில் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த 97 முறைபாடுகள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்ட முறைபாடுகளுக்கு சபையால் தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும் | 2018 ஆம் ஆண்டு பொதுமக்கள் தொடர்பு பகுதிக்கு கிடைக்கெப்பெற்ற கோரிக்கைகள், முறைப்பாடுகளில் 58 விடயங்கள நிவர்த்தி செய்யப்பட வேண்டியதாகவுள்ளது. இவற்றுள் சில விடயங்கள் வாய் மொழி மூலம் பரஸ்பர இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. மேலும் முறையற்ற கட்டிடங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர சபைக்குரிய அதிகாரங்கள் இன்மையால் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் அதிகாரக்கையளிப்பு கோரிக்கை கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அனுமதி கிடைக்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய விடயங்கள் நிவர்த்தி செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 109 ஆகவும் உள்ளாடியான பதவியணியினர் எண்ணிக்கை 100 ஆகவும் உள்ளமையால் 09 வெற்றிடங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிட்டங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நகர சபைக்குரிய அட்டவணைப் படுத்தப்பட்ட பதவி அணியினருக்கான வெற்றிடம் - 06 இவ் வெற்றிடங்கள் நிரப்புவதற்கான கோரிக்கை கடிதங்கள் பிரதிப்பிரதம செயலாளர் - பொது நிர்வாகம் வடமாகாணம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது மேலும் அட்டவணைப் படுத்தப்படாத பதவி அணியனருக்கான வெற்றிடம் 03 இனை நிரப்புவதற்காக உள்ளுராட்சி ஆணையாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ள தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை- | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்படுத்தப்படாத 24 வாகனங்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | குறித்த 24 வாகனங்களில் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் திருத்தம் செய்ய முடியாத ஏனைய வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 17,613,000 பெறுமதியான 14 வாகனங்களின் உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | 14 வாகனங்களுக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் பயன்பாட்டில் இருந்து வரும் ரூபா 31,100,000 பெறுமதியான 03 கட்டங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை மாற்றிக்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமை சபைக்கு மாற்றப்படல் வேண்டும் | மேற்குறித்த காணியின் உரித்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு மன்னார் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் பாதீட்டு செலவீனம் ரூபா 88,010,500 ஆக இருந்த போதும் உண்மைச் செலவினங்கள் ரூபா 71,621,015 ஆக உள்ளது. | பாதீட்டு செலவினத்திற்கும் உண்மைச் செலவினத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு ஏற்படாத வகையில் பாதீடு தயாரிக்கப்படல் வேண்டும் | 2018 ஆம் ஆண்டு பாதீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் தொடர்பாக எதிர்வரும் ஆண்டில் குறித்த செலவீனங்கள் தொடர்பாக பாதீடு செய்யப்படும் போது பாதீட்டிற்கும் உண்மைச் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |